# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 21, 2019

Weekly E-paper • December 21, 2019




## ரஜினிகாந்த் அவர்களே
# எது வன்முறை?

சுப. வீரபாண்டியன்

## பிரிக்கப்படும் பல்கலைக்கழகம்

பேராசிரியர் அ.இராமசாமி

## குடியுரிமைச் சட்டம்- திரும்பப் பெறுக!

தலையங்கம்

## காப்போம் மதச்சார்பின்மை

வழக்கறிஞர் வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • டிசம்பர் 21, 2019 Weekly E-paper • December 21, 2019


# ரஜினிகாந்த் அவர்களே எது வன்முறை?

● சுப. வீரபாண்டியன்

முழுப் பொய்யைக் காட்டிலும், அரைகுறை உண்மை ஆபத்தானது. அதே போல, எது குறித்தும் பேசாமல் இருப்பதை விட, அரைகுறையாகவும். பொத்தாம் பொதுவாகவும் பேசுவது ஆபத்தானது.

அதனைத்தான் நடிகர் ரஜினிகாந்த் இப்போது செய்திருக்கிறார்.

குடியுரிமைச் சட்டத் திருத்தம், இஸ்லாமிய மக்களுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் இழைத்திருக்கும் அநீதியை எதிர்த்து நாடே பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இதனை ஆதரித்துப் போராட்டத்தில் இறங்கவில்லை என்றாலும் குற்றமில்லை. பேசாமலாவது இருந்திருக்க வேண்டும். ஆனால் ரஜினி அறிவுரை சொல்கிறார். வன்முறை எதற்கும் தீர்வாகாதாம். இப்போது நடக்கும் வன்முறை வேதனை தருகிறதாம்!

இப்படித்தான், தூத்துக்குடியில் துப்பாக்கிச் சூடு நடந்தபோதும் பேசினார். வன்முறை கூடாது என்றார்.

எது வன்முறை என்பதை ரஜினி சொல்வாரா?

ஊர்வலம் நடத்தியது வன்முறை, அந்த மக்களின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது வன்முறை இல்லை!அநீதியான ஒரு சட்டத்தை எதிர்த்து அறவழியில் மாணவர்கள் போராட்டம் நடத்தியது வன்முறை, ஆனால் அவர்களை அடித்துத் துவைத்து அரசு நடத்திய வெறியாட்டம் வன்முறை இல்லை!

உழைப்பிற்குரிய ஊதியம் பெறாத ஒரு தொழிலாளி தெருவில் இறங்கிப் போராடும் வேளையில், ஒரு கல்லை எடுத்து வீசுவது மட்டுமே வன்முறை இல்லை. அவனுக்கு உரிய ஊதியம் கொடுக்காத செயலும் வன்முறைதான்.



நேற்று கர்நாடகத்தில், வரலாற்றுப் பேராசிரியர் ராமச்சந்திர குஹா, நியாயம் கேட்டுத் தெருவுக்கு வந்தார். ஆள் இல்லை, ஆயுதங்கள் இல்லை. ஒரே ஒரு அட்டை மட்டுமே அவர் கையில் இருந்தது. அவரை எப்படிக் காவல்துறை இழுத்துக் கொண்டு போனது என்பதைக் காணொளியில் கண்டோம். அவர் என்ன வன்முறைப் போராட்டத்திலா ஈடுபட்டார்?

உண்மையைச் சொன்னால் இரண்டு விதங்களில் அரசுதான் வன்முறையில் இறங்கியுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளுக்கே எதிரான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததன் மூலமும், அதனை எதிர்ப்போர் மீது காவல்துறையை ஏவி விடுவதன் மூலமும் வன்முறையில் ஈடுபட்டுள்ளது. எதிர்க்கருத்துகள் பரவாமல் இருக்க மாநிலங்கள் சிலவற்றில் இணையத்தளத் தொடர்பையும் துண்டித்துள்ளது. இவை அனைத்தும்தான் வன்முறை. இவற்றை அரச பயங்கரவாதம் என்றே கூற வேண்டும்.

இதனைக் கண்டிக்கத் துணிவில்லாமல், மக்களைப் பார்த்து வன்முறை கூடாது என்று உபதேசிக்கும் மகாத்மா அவர்களே, நீங்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்பே நீங்கள் யார், உங்களுடைய முகம் யாருடையது. நீங்கள் யாருக்காக அரசியலுக்கு வருகின்றீர்கள் என்பதை வெளிப்படுத்தியது ஒரு விதத்தில் நல்லதுதான்! நன்றி ரஜினி!!

## பேராசிரியர்-98



***இன்னும் கடந்தால் ஈராண்டு***
***எங்கள்***
***பேராசிரியருக்கு நூறாண்டு!***
***அவர்***
***தாங்கிப்பிடித்த திராவிடக்கொடி***
***தாழாமல் தாங்கும்***
***எம் தோள்கள்!***

- சுப.வீரபாண்டியன்

# பிரிக்கப்படும் பல்கலைக்கழகம்..?

● பேராசிரியர் அ.இராமசாமி, முன்னாள் துணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம்

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் அனைத்தையும் தரம் பிரித்து 'Institute of Eminence' என்று மாற்றுவதற்கான திட்டத்தை மய்ய அரசு கொண்டு வந்திருக்கிறது. அது பாராட்டுக்குரிய திட்டம்தான். ஆனால் அதிலே சில குளறுபடிகள் இருக்கின்றன. பல்கலைக்கழகங்களுக்கு என்று சொல்லிவிட்டு ஒரு கட்டடம் கூட இல்லாத 'ஜியோ' (Jio) பல்கலைக்கழகத்திற்கு ஆண்டுக்கு ஆயிரம் கோடி கொடுக்கத் திட்டம் வகுத்திருக்கிறார்கள். ஆக ஆரம்பத்திலேயே 'Institute of Eminence' என்பதில் சில குறைபாடுகள் இருக்கின்றன.



பேராசிரியர் அ.இராமசாமி

தமிழ்நாட்டில் அரசு பல்கலைக்கழகமான அண்ணா பல்கலைக்கழகத்தை 'Institute of Eminence' என்று மாற்றுவதற்கு மைய அரசு முன்வந்திருக்கிறது. அது வரவேற்கத்தக்கது தான்.

அதை எப்படிச் செய்யலாம் என்று வரையறுக்க தமிழக அரசு ஒரு குழுவை அமைத்து இருக்கிறது. அந்தக் குழுவில் யார் யார் இருக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கையாகவும், விசித்திரமாகவும் இருக்கின்றது.

உயர்கல்வித்துறை அமைச்சர் இருக்கிறார். அது நியாயமானது. ஏற்றுக்கொள்ளலாம். நிதித்துறை, உயர் கல்வித் துறை, சட்டத் துறைச் செயலாளர்கள் இருக்கிறார்கள். பள்ளிக்கல்வித் துறை அமைச்சரும் இருக்கின்றார். அவருக்கும் பல்கலைக் கழகத்திற்கும் என்ன சம்பந்தம்? அவர் இருக்கக் கூடாது. அது கூடப் பரவாயில்லை. மீன்வளத்துறை அமைச்சர் இடம் பெற்றிருக்கிறார். தெரு ஓரத்தில் நின்று லேகியம் விற்பவர்களைப் போல 'சர்வரோக நிவாரணி' என்று எல்லாவற்றுக்கும் திரு ஜெயக்குமார் அவர்களைப் போடுகிறார்கள். அது அவர்கள் பாடு. ஆனால் உயர் கல்விக்கும் மீன்வளத் துறைக்கும் என்ன சம்பந்தம்? மதுவிலக்குத் துறையைச் சேர்ந்த ஒரு அமைச்சர் குழுவில் இருக்கிறார். இவருக்கும் பல்கலைக்கழகத்திற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? ஆக எதுவுமே சரியில்லாத ஒரு குழுவாக இது இருக்கிறது. கல்வியாளர்களைக் கொண்ட குழுவாக அமைக்கப்பட வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால் ஆறு மாதத்திற்கு முன்பு புதிய கல்விக் கொள்கையை மைய அரசு அறிவித்தது. அதுபற்றி திமுக தலைவர் மு க ஸ்டாலின் உடனே கருத்து தெரிவிக்கவில்லை.

கல்வியாளர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்தார். 10 பேர் கொண்ட அந்தக் குழுவில் நான்கு பேர்தான் அரசியல்வாதிகள், ஆறு பேர் கல்வியாளர்கள்.

அந்தக் கல்வியாளர்கள் கூட்டம் கூடி இரண்டு மாதங்கள் விவாதம் நடத்தி அதன் பிறகு அறிக்கை சமர்ப்பித்தது. அறிக்கையைப் படித்துப் பார்த்த பின்னர்தான் அவர் கருத்து தெரிவித்தார்.

அதேபோல தமிழக அரசும் கல்வியாளர்கள் கொண்ட குழுவை நியமிக்க வேண்டும். அந்தக் குழுவின் பரிந்துரையை ஏற்றுச் செயல்பட வேண்டும்.

இரண்டாவது, அண்ணா பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிக்க முயல்கிறார்கள். கிண்டி பொறியியல் கல்லூரியைத் தனியே ஒரு ஆய்வுப் பல்கலைக்கழகமாகவும் மற்ற 600 பொறியியல் கல்லூரிகளையும் இணைத்து இணைவிப்புப் பல்கலைக்கழகம் ஒன்றும் கொண்டுவருகிறார்கள்.


2009-இல் கலைஞர் முதலமைச்சராக இருக்கும்போது தொலைநோக்குப் பார்வையோடு அண்ணா பல்கலைக்கழகம் 600 கல்லூரிகளோடு செயல்படுவதால் சென்னையில் உள்ள கிண்டி பொறியியல் கல்லூரியில் ஆராய்ச்சிப் படிப்பும் கெட்டுப் போகிறது, மாணவர்களுக்கும் சிரமமாக இருக்கிறது என்று ஐந்து பல்கலைக்கழகங்களை உருவாக்கினார்.

சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கோவை என ஐந்து இணைப்பு பல்கலைக் கழகங்களாகவும் கிண்டி பொறியியல் கல்லூரி தனியாக ஆய்வுப் பல்கலைக்கழகமாகவும் கொண்டுவந்தார். அவர் கல்வியாளர்களைக் கேட்டுத்தான் இதனைச் செய்தார்.

கலைஞர் அவர்கள் எவ்வளவு தொலைநோக்குப் பார்வையுடன் செய்தார் என்பதை மறந்துவிட்டு 2011-ல் ஆட்சிக்கு வந்ததுமே கல்வியாளர்களைக் கலந்தாலோசிக்காமல் அன்றைய முதலமைச்சர் ஜெயலலிதா இந்த ஐந்து பல்கலைக்கழகங்களையும் ஒழித்துவிட்டு ஒன்றாக இணைத்து விட்டார். இப்போது இரண்டாகப் பிரிக்கிறார்கள். கலைஞர் செய்த ஏற்பாட்டைப் போல ஐந்து பல்கலைக்கழகங்களாகக் கொண்டு வரவேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக இட ஒதுக்கீட்டுப் பிரச்சனை.

இட ஒதுக்கீடு நீடிப்பது தொடர்பாக தமிழக அரசு மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி இருக்கிறது அவர்கள் இட ஒதுக்கீடு நீடிக்கும் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லி இருக்கிறார்கள். இட ஒதுக்கீடு நீடிக்கும். அதில் யாரும் கை வைக்க முடியாது. ஆனால் 69 சதவிகித இட ஒதுக்கீடு இருக்குமா? அதுதான் கேள்வி. அதற்கு உறுதியான பதில்அங்கிருந்து வரவில்லை. அவர்களும் தரவில்லை. இவர்களும் கோரவில்லை. ஆடையை விற்றுவிட்டு அன்னதானம் செய்ய முடியாது. ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் தருகிறார்கள் என்பதற்காக இட ஒதுக்கீட்டை விட்டுவிட முடியாது.




எனவே தமிழக அரசு கல்வியாளர்களைக் கொண்டு இதில் முடிவு எடுக்க வேண்டும்.

அண்ணா பல்கலைக்கழகம் ஒரு தன்னாட்சி பெற்ற நிறுவனமாக இருக்க வேண்டும். மைய அரசின் தலையீடோ, UGC இன் தலையீடோ இருக்கக்கூடாது.

அண்ணா பல்கலைக்கழகம் தமிழக அரசின் நிதியிலிருந்துதான் உருவாக்கப் பட்டது. எனவே அதில் மைய அரசு அதிகாரம் செலுத்தக் கூடாது. நிதி கொடுப்பதோடு அவர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். ●

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**ஸ்ரீவித்யா**

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
**www.keetru.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408

## சென்னையில் குறளும் கீதையும்




14-12-2019 அன்று சென்னை அன்பகத்தில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை- கருஞ்சட்டைப் பதிப்பகம் ஏற்பாடு செய்த 'குறளும் கீதையும்' என்ற நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. பேராசிரியர் சுப.வீரபாண்டியன் குறளையும், வழக்கறிஞர் அருள்மொழி கீதையையும் விளக்கி நிகழ்த்திய கலந்துரையாடல் இந்நிகழ்வு. நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னர் எழில்.இளங்கோவன் எழுதிய 'அருந்ததிய இயக்க வரலாறு', வெற்றிச்செல்வன் எழுதிய 'கருஞ்சட்டையின் வரலாறு', உமாவின் தொகுப்பு நூலான 'திராவிட இயக்கமும் சமூக நீதியும்-2' ஆகிய 3 நூல்கள் வெளியிடப்பட்டன.

## பெரியார் திடலில் 'நெஞ்சுக்கு நீதி'



சென்னை பெரியார் திடலில், பெரியார் நூலக வாசகர் வட்டம் ஏற்பாட்டில் 19-12-2019 அன்று கலைஞர் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' நூல் குறித்த 15-ஆவது உரையைப் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் நிகழ்த்தித் தொடரை நிறைவு செய்தார் .

## சூலூரில் கலந்துரையாடல்



கோவை, சூலூரில் திராவிட இயக்கத் தமிழர் பேரவை ஆலோசனைக் கூட்டம் சிற்பி செல்வராசு தலைமையில் நடைபெற்றது. சூலூர் தேவராஜ் முன்னிலை வகித்தார். சூலூர் நகர திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவராக தோழர் சம்பத், செயலாளராக தோழர் கவுதமன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## குடியுரிமைச் சட்டம் - திரும்பப் பெறுக!

*முன்னாள் பிரதமர் வாஜ்பாய் நினைவு கருத்தரங்கில் பேசிய முன்னாள் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, "தேர்தலில் பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெறுவது என்பது ஒட்டுமொத்த மக்களின் பெரும்பான்மையைப் பெற்றதாக ஆகாது. மாறாக ஒரு நிலையான அரசை அமைக்க மக்கள் அளித்திருக்கும் ஓர் உரிமை மட்டுமே அது" என்று பேசியிருக்கிறார்.*

*இது பாஜக குறித்து மறைமுகமாக அவர் சொன்ன கருத்தாக இருக்கிறது.*

*தேசியக் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைப் பெரும்பான்மை பலம் இருப்பதனால், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியது பாஜக அரசு.*

*அதன் விளைவு இன்று இந்தியாவே கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. மாணவர்கள், வணிகர்கள், மக்கள் என்று அனைத்து மட்டத்தினரும் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராகக் கிளம்பிவிட்டனர்.*

*ஜாமியா-மிலியா இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தில் காவலர்கள் எவ்வித அனுமதியும் இன்றி நுழைந்து அமைதியாகப் போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது தடியடி வன்முறைத் தாக்குதல்கள் நிகழ்த்தியதால், அதன் தாக்கம் இந்தியா முழுவதும் பரவிவிட்டது.*

*பல்வேறு மாநிலங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இணையத்தளச் சேவைகள் முடக்கப்பட்டுள்ளன. உலகத்திலேயே அரசியல் காரணங்களுக்காக இணையத்தளச் சேவைகள் முடக்கப்படுவதில் முதன்மையாய் இருக்கும் நாடு இந்தியா என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.*

*அன்றாடப் போக்குவரத்திற்குப் பெரும் பயனாக இருக்கும் மெட்ரோ ரயில்கள் சில மாநிலங்களில் நிறுத்தப்பட்டுள்ளன.*

*கர்நாடகத்தின் வரலாற்றுப் பேராசிரியர்கள் இராமச்சந்திர குஹா, யோகேந்திர யாதவ் இவர்கள் கர்நாட அரசால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.*

*இதனை அத்துமீறிய செயல் என்று கண்டித்துள்ளார் திமுக தலைவர் தளபதி ஸ்டாலின் அவர்கள்.*

*காஷ்மீரில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள மெஹ்பூபா முஃப்தி வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஜம்மு-காஷ்மீரில் வசிக்கும் உள்ளூர் மக்கள் அடக்கு முறைகளை அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலையைக் காண்பதற்கு நாட்டு மக்கள் யாரும் காஷ்மீர் பள்ளத்தாக்குக்கு வரவேண்டியதில்லை. ஏனென்றால் காஷ்மீரின் நிலையை நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் பாஜக அரசு கொண்டுபோய் விட்டது" என்று சொல்லியிருக்கிறார்.*

*இதைவிடத் தெளிவாக வேறுயாரும் இன்றைய நாட்டின் நிலையை, இன்றைய மத்திய ஆட்சியின் அத்து மீறலைச் சொல்லிவிடமுடியாது. இந்த நிலை தொடர்ந்து நீடிப்பது நாட்டின் நலத்திற்கு உகந்தது அன்று.*

*மக்களுக்காகத்தான் சட்டமே ஒழிய, சட்டத்திற்காக மக்கள் இல்லை.*

*மத்திய பாஜக அரசு உடனடியாக குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறுவதே இதற்கு ஒரே தீர்வு.*

# எழுவோம்! திரள்வோம்!

# மதச்சார்பின்மை காப்போம்

• வழக்கறிஞர் வைரமுத்து

குடியுரிமைத் திருத்தச் சட்ட மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அறிமுகப்படுத்தப்பட்ட போது, மக்களவையில் ஆதரவாக 311 உறுப்பினர்களும், எதிராக 80 உறுப்பினர்களும் வாக்களித்தனர். மாநிலங்களவையில் 125 உறுப்பினர்கள் ஆதரவாகவும், 105 உறுப்பினர்கள் எதிராகவும் வாக்களித்தனர். தற்போது குடியரசுத் தலைவரின் ஒப்புதலையும் பெற்று இம்மசோதா சட்டமாகி உள்ளது.




இந்தச் சட்டத்தில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம் நாடுகளில் இருந்து (இலங்கை இந்தப் பட்டியலில் இல்லை) ஆவணங்கள் இன்றி அகதிகளாக வரும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பார்சிகள், ஜெயின் மற்றும் பௌத்த மதத்தினர் ஆகியோருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படும். ஆனால், முஸ்லிம்களுக்கு இந்தச் சட்டத்தில் இடம் அளிக்கப்படவில்லை. கடந்த 2014-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் தேதிக்கு முன்பாக வந்துள்ளவர்கள் குடியுரிமை பெறத் தகுதியானவர்களாகக் கருதப்படுவர்.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின்படி உரிய ஆவணங்கள் எதுவுமில்லை என்றாலும், குறைந்தது 5 ஆண்டுகள் இந்தியாவில் வாழ்ந்தாலே அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கலாம் என்ற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது

இந்தச் சட்டம் மதரீதியான பாகுபாடு பார்ப்பதால், நமது அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்பதையும், இந்திய முஸ்லிம்களுக்கு எதிராக இந்தச் சட்டத்தைப் பயன்படுத்த வாய்ப்பு இருப்பதையும் மறுப்பதற்கு இல்லை. அண்டை நாடுகளில் இருந்து அகதிகளாக வரும் மதரீதியான ஆதிக்கத்தால் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரின் நலன் காக்கத்தான் இந்த சட்டத் திருத்தம் என்றால் பாகிஸ்தானில் இருந்து வரும் அகமதியா மற்றும் ஷியா முஸ்லிம்கள், மியான்மரில் இருந்து வரும் ரோஹிங்கியாக்கள், இலங்கையில் பெரும் பாதிப்பைச் சந்தித்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்துள்ள ஈழத்தமிழர்கள் போன்றோருக்குக் குடியுரிமை வழங்க இந்தச் சட்டத்தில் ஏன் வழிவகை செய்யப்படவில்லை எனப் பல்வேறு அரசியல் கட்சிகள் கேள்வி எழுப்பியுள்ளன.

மேற்கு வங்காளம், கேரளா, மத்தியப் பிரதேசம், பஞ்சாப் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்கள் இந்தச் சட்டத்தை அமல்படுத்த மாட்டோம் என்று அறிவித்துள்ளன. டெல்லி, வடகிழக்கு மாநிலங்கள், கேரளா, தமிழ்நாடு என நாடெங்கும் இதற்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. **தமிழகத்தில் தி.மு.க இளைஞர் அணி சார்பில் சட்டத்தைக் கிழித்து எறிந்தும், தி.மு.க சார்பில் கண்டன ஆர்ப்பாட்டமும் நடைபெற்றதுடன் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அனைத்துக் கட்சிக் கூட்டமும் நடத்தப்பட்டது. அதன் முடிவில் வரும் 23.12.2019 அன்று சென்னையில் "குடியுரிமைத் திருத்தச் சட்ட எதிர்ப்பு பேரணி" நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.**

எரிகிற தீயில் எண்ணெய் ஊற்றும் வகையில் இச்சட்டத்தைத் தொடர்ந்து, அசாமில் செயல்படுத்தப்பட்ட "தேசிய குடிமக்கள் பதிவேடு" நடைமுறையை நாடு முழுவதும் விரிவுபடுத்த நடுவணரசு திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவருகின்றன. தேசியக் குடிமக்கள் பதிவேட்டு நடைமுறை நாடு முழுவதும் அமல்படுத்தப்படும் போது என்ன நடக்கும் என்று சிந்தித்தால் மிகப் பெரும் ஆபத்துதான் ஏற்படும். அந்நிய நாடுகளில் இருந்து வந்த இஸ்லாமியர்கள் அல்லாத அனைவரும் சான்றாதாரங்கள் இல்லையென்றாலும், இந்தியராக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இஸ்லாமியர்கள் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுவார்கள்.

நாட்டைச் சூழ்ந்துள்ள இந்த பேராபத்தில் இருந்து விடுபட கட்சி, மொழி, மதம், சாதி போன்ற வேறுபாடுகளை துறந்து ஓரணியில் திரண்டு இந்தக் கொடும் சட்டங்களை எதிர்த்துப் போராட வேண்டும். இல்லையேல் நமது அரசியலமைப்பின் அடிநாதமான மதச்சார்பின்மை சிதைந்து விடும்.

எழுவோம் ! திரள்வோம் ! மதச்சார்பின்மை காப்போம் !!●

கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும், தோழர் சுபவீ, பேராசிரியர் அருணன் ஆகியோர் எழுதியுள்ள பிற நூல்களும் இப்போது இணையத்தள விற்பனையில் உள்ளன. இந்தியாவின் எந்தப் பகுதியிலிருந்தும் நூல்களை இணைய வழியில் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம் செலுத்தியோ நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி : karunchattaibooks.com

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,